*2*

# நமது ஊக்கத்தின் ஆதாரமூலம்

## (1:1-4அ)

*எபிரெயர் நிருபத்தைப் பற்றிய நமது படிப்பை நாம் தொடங்குகையில், இந்தப் புத்தகம் "ஊக்கமூட்டுதலின் வார்த்தையாக" உள்ளது என்று நான் கருத்துத் தெரிவித்தேன். இந்தப் புத்தகத்தின் தொடக்கத்தில், நமது ஊக்கமூட்டுதலின் ஆதாரமூலம், நமக்கு உடனடியாக அறிமுகப்படுத்தப்படுகிறது: அது இயேசு கிறிஸ்து. 1 முதல் 4 வரையிலான வசனங்கள் உண்மையிலேயே வேதவசனத்தின் ஒரு மாபெரும் பகுதியாக உள்ளன. இயேசுவே நமது ஊக்கத்தின் ஆதாரமூலமாக இருக்கிறார் என்றும் அவர் அப்படிப்பட்ட ஆதாரமூலமாக இருப்பதற்குப் பல வழிகளில் தகுதிபெற்றுள்ளார் என்றும் இவைகள் நமக்குக் கூறுகின்றன.*

### *அவரது குமாரத்துவம் (1:1, 2அ)*

*"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்" (வசனங்கள் 1, 2அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறுவதன் மூலம் இப்புத்தகம் தொடங்குகிறது. அரசரின் (இயேசுவின்) மாட்சிமையும் அவர் போட்டியாளர்கள் யாரையும் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையும், எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கப் பகுதியில் ஆய்வுக்கருத்தாக உள்ளது. இயேசுவின் குமாரத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. 2:9வரை குமாரனுடைய தகுதிப்பெயர் குறிப்பிடப்படவில்லை. நமது வசனப்பகுதியில், அவர் ஒரு குமாரனாக இருக்கிறார் - அதாவது, குமாரனுடைய தகுதியையும் மேன்மையையும் கொண்டவராக இருக்கிறார் - என்று மாத்திரம் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

### *அவரது தனிச்சிறப்பு (1:2ஆ, 3)*

*2ம் வசனத்தின் எஞ்சிய பகுதியும் 3ம் வசனமும், குமாரனுடைய ஏழு பண்புகளைக் கொடுக்கின்றன. இந்தப் பண்புகள், இயேசுவின் தனிச்சிறப்பை - மாபெரும் தன்மையை - முக்கியத்துவப்படுத்துகின்றன.*

*சுதந்தரவாளி: "... இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்" (வசனம் 2ஆ). இயேசு குமாரனாக இருப்பதால், சுதந்திரமானது உரிமை நிறைந்த வகையில் அவருடையதாக உள்ளது.*

*சிருஷ்டிகர்: "... இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (வசனம் 2இ). "உலகங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, "யுகங்கள்" என்பதற்கான வார்த்தையாக உள்ளது, இது இவ்விடத்தில் எல்லா இடம் மற்றும் காலத்தையும் குறிப்பதற்கு வானவியல் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய குமாரன் என்ற வகையில் இயேசு,*

எல்லாவற்றையும் உண்டாக்குவதற்குத் தேவனுடைய வல்லமையைக் கொண்டிருந்தார் (காண்க யோவான் 1:3; கொலோசெயர் 1:16).

*தேவனுடைய மகிமையின் பிரகாசம்:* "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும்" (எபிரெயர் 1:3அ). பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பிற்று (காண்க யாத்திராகமம் 40:34-38); அவரது மகிமை அவரது பிரதிபலிப்பாகவே இருந்தது. புதிய ஏற்பாட்டில் இயேசு, தேவனுடைய மகிமையைப் பிரகாசித்தார். சூரியனில் இருந்து வரும் கதிர்கள் சூரியனை விட்டுப் பிரிந்திருக்க முடியாததைப் போன்றே, இயேசு தமது பிதாவினிடத்தில் இருந்து பிரிக்கப்பட முடியாது.

*தேவனுடைய சாயல்:* "... அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து" (வசனம் 3ஆ). "தன்மை" என்பது சாராம்சத்தில் தேவனுடைய இயல்பைக் குறிக்கிறது. இந்தச் சொற்றொடர் "தேவனுடைய தன்மையின் மிகச்சரியான பிரதிநிதித்துவம்" என்று அர்த்தப்படுகிறது. இயேசு, தேவனுடைய *வசனத்தை* நமக்குக் கொடுப்பதற்காக மாத்திரமல்ல, ஆனால் தேவனுடைய *தன்மையை* நமக்கு வெளிப்படுத்துவதற்காகவும் இந்த உலகத்திற்கு வந்தார் (யோவான் 14:9). இந்த ஏழு விவரிப்புச் சொற்றொடர்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடராக்கம் தேவனாகவே இருப்பவருக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட முடியும்.

*அண்டத்தைத் தாங்குகிறவர்:* "சர்வத்தையும்தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்" (எபிரெயர் 1:3இ). இயேசு இந்த அண்டத்தை ஒன்றுகூட்டிப் பற்றியுள்ளார் என்று கொலோசெயர் 1:17ம் வசனம் அறிவிக்கிறது. இவ்வசனப்பகுதி, அவர் அதை வழிநடத்துகிறார் மற்றும் தாங்குகிறார் என்று அறிவிக்கிறது.

*மீட்பர்:* "தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி" (எபிரெயர் 1:3ஈ). இங்கு, இயேசு நமது பாவநிவாரண பலியாக இருத்தல் என்பதுடன் இயேசுவின் ஆசாரித்துவப் பணிப்பொறுப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிருஷ்டிகர் என்ற வகையில் இயேசுவின் *வல்லமை* மற்றும் இரட்சகர் என்ற வகையில் அவரது *பாடுகள்* ஆகியவற்றின் கருத்துக்களை ஒன்றுகூட்ட முயற்சி செய்தலானது, இந்த இரு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று சீர்பொருத்தமற்றவை அல்ல என்று காண்பித்தலுக்கானதாக உள்ளது.

*அரியணையில் அமர்த்தப்பட்டவர்:* "உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்" (வசனம் 3உ). இந்தக் கூற்று, இயேசு பரத்துக்கேறியது மற்றும் முடிசூட்டப்பட்டது ஆகியவற்றைப் பற்றிய குறிப்பை ஏற்படுத்துகிறது. "வலது பாரிசம்" என்பது கனத்தையும் வல்லமையையும் குறிக்கிறது. நமது கர்த்தராகிய இயேசு எவ்வளவு பெரியவராக இருக்கிறார்!

## அவரது மேன்மை (1:4அ)

4ம் வசனம், அதற்கு முந்திய வசனத்தில் தொடங்கிய வாக்கியத்தை முடித்து வைக்கிறது: "இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்." அடுத்த பாடத்தில் நாம், தூதர்களைக் காட்டிலும்

இயேசு கொண்டுள்ள மேன்மையைப் பற்றிக் கலந்துரையாடுவோம்; ஆனால் இந்த எடுத்துரைப்பில் "மேன்மை" என்ற வார்த்தையை வலியுறுத்த நான் விரும்புகிறேன். "மேன்மை" என்பது எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் ஒரு திறவுகோல் வார்த்தையாக உள்ளது. எபிரெயர் 1:4ல் இயேசு, தூதர்களைக் காட்டிலும் மேன்மையானவர் என்று அறிவிக்கப்பட்டார். பிந்திய பாடங்களில் நாம், கிறிஸ்தவம் ஒரு மேன்மையான உடன்படிக்கையை, ஒரு மேன்மையான பலியை, மேன்மையான வாக்குத்தத்தங்களை, ஒரு மேன்மையான நம்பிக்கையை மற்றும் பிறவற்றைக் கொண்டுள்ளது என்பதைக் கற்றறிவோம் (காண்க 1:4; 7:19, 22; 8:6; 9:23; 10:34; 11:16, 35, 40; 12:24). 1:4ல் NIV வேதாகமம், "மேன்மை" என்ற வார்த்தைக்குப் பதிலாக "உயர்வான" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது: "இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு *உயர்ந்த* நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் *உயர்ந்தவரானார்*" (வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது).

இயேசு, நமது ஊக்கத்தின் ஆதாரமூலமாக இருக்கிறார். அவர் தமது குமாரத்துவம், தமது தனிச்சிறப்பு மற்றும் தமது மேன்மை ஆகியவற்றின் காரணமாக, அந்த ஆதாரமூலமாக இருக்கத் தகுதி கொண்டுள்ளார்.

## போதகருக்குக் குறிப்புகள்

**உரிமையாளர், உருவாக்கினவர் மற்றும் இரட்சகர்**

பிரசங்கியார் அல்லது போதகர் என்ற வகையில் ஒருவர், இந்த ஏழு சொற்றொடர்களையும் கண்ணோக்கும்போது, இவைகள் *உலகத்துடன் இயேசுவுக்குள்ள உறவுமுறையின்* விவரிப்புகள் என்ற வகையில் இவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க முடியும்: (1) வானவியல் உலகம், (2) உலகத்தில் உள்ள மக்கள் அல்லது (3) அவருக்குச் சொந்தமானவர்களாக (கிறிஸ்தவர்களாக) இந்த உலகத்தில் உள்ள மக்கள்.

பின்வரும் பட்டியலில் உள்ள ஒவ்வொரு வரியைப் பற்றியும் நீங்கள் கலந்துரையாடுகையில், வகுப்பில் உள்ள உறுப்பினர்களிடத்தில், எந்த "உலகம்" (1, 2 அல்லது 3) அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது என்று நீங்கள் கேட்க முடியும். சிலவேளைகளில் இந்தக் கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதில்கள் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, உலகத்தின் "உரிமையாளர்" மற்றும் அதை "உருவாக்கினவர்" என்ற வகையில் இயேசுவின் பணிப்பொறுப்புகள், விவரிப்பு (1) அடிப்படையில் உள்ளடக்குகிறது ஆனால் இது (2) மற்றும் (3) ஆகியவற்றையும் உள்ளடக்கக் கூடும். மீண்டுமாக, "உலகத்தின் இரட்சகர்" என்ற கருத்துப் பற்றி, இயேசு எல்லா மக்களுக்கும் வலிவார்ந்த இரட்சகராக இருக்கிறார் (2), ஆனால் அவர், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாகத் தம்மை ஏற்றுக்கொள்பவர்களையே (3) உண்மையில் இரட்சிக்கிறார்.

- உலகத்தின் உரிமையாளர்
- உலகத்தை உருவாக்கினவர்
- உலகத்தின் ஒளி
- உலகத்திற்கு வெளிப்படுத்தினவர்
- உலகத்தைத் தாங்குகிறவர்

- *உலகத்தின் இரட்சகர்*
- *உலகத்திற்காகப் பரிந்து பேசுபவர்.*[1]

***கிறிஸ்து***

*குமாரனை யூதத்துவப் பின்னணியில் இருந்தவர்கள் நினைத்துப் பார்ப்பது போன்று - கிறிஸ்துவாக, பல காலங்களாக எதிர்பார்க்கப்பட்டிருந்த மேசியாவாக - சிந்தித்துப் பார்த்தல் என்பது, தேவத்துவத்தின் இரண்டாம் உறுப்பினருக்கான விவரிப்புத் தலைப்புகளை வரிசைப்படுத்துவதற்கு இன்னொரு வழியாக உள்ளது. இயேசுவின் பண்புகளை (மற்றும் தனிச்சிறப்பை) பற்றிப் பேசுவதற்கு முதல் எழுத்துக்களில் சொல் வரும் பின்வரும் கரந்துரைப் பாடலைப் பயன்படுத்த முடியும்: (இதை அப்படியே ஆங்கிலத்தில் கொடுத்தால்தான் இந்தப் பகுதியின் அர்த்தம் நிறைவடையும்).*

- **C**reator (and Sustainer)
- **H**eir of all things
- **R**adiation of God’s glory
- **I**mage of God
- **S**avior
- **T**hrone-occupant

***அபிஷேகம் பண்ணப்பட்டவர்***

*“மேசியா” என்பதற்கான எபிரெய வார்த்தையும் அதன் கிரேக்கச் சமவார்த்தையான “கிறிஸ்து” என்பதும், “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்று அர்த்தப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில், தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் அரசர்கள் ஆகியோர் அபிஷேகம் பண்ணப்பட்டனர். நமது வேதவசனப் பகுதியில் இயேசு, நிறைவான வெளிப்பாட்டுடன் தீர்க்கதரிசியாக (வசனங்கள் 1, 2அ), நிறைவான பலியுடன் ஆசாரியராக (வசனம் 3) மற்றும் வலது பாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யும் அரசராக (வசனம் 3) முன்வைக்கப்பட்டுள்ளார்.*

---

*குறிப்புகள்*

[1]*தேவனுடைய வலது பாரிசத்தில், இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார் (ரோமர் 8:34; எபிரெயர் 4:14-16).*